Source: *Tamil Murasu,* p2
Date: 16 March 2017

லிம்: வாழ்நாள் முழுதும் ஒரே வேலையில் நிலைத்திருக்கும் போக்கு விரைவில் மாறும்

வாழ்நாள் முழுதும் ஒரே வேலையில் இருக்கும் போக்கு நாளடைவில் மாறும் என்றும் நாளைய வேலை உலகத்தில் ஊழியர்கள் தங்கள் வாழ்நாளில் காலத்துக்கேற்பவும் திறனுக்கேற்பவும் வெவ்வேறு வேலைகளைப் பார்க்க நேரிடலாம் என்றும் மனிதவள அமைச்சர் லிம் சுவீ சே தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கென்ட் ரிஜ் அமைச் சர்நிலை கருத்தரங்கில் பங்கேற்ற திரு லிம், சுமார் 150 உயர்கல்வி மாணவர்களிடையே பேசினார்.

"நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், ஒரே நிறுவனத்தில் நீண்டகாலம் பணிபுரிவது அன் றைய சூழலுக்கு ஏதுவான ஒன் றாக இருந்தது. ஆனால், இக்கா லத்தில் அனைவரும் பிற வேலை களிலும் ஈடுபடும் சாத்தியம் உள்ளவாறு தங்களை மாற்றிக் கொள்ளவும் வேலைகளுக்கு ஏற்ப திறன்களையும் வளர்த்துக்கொள்ள வும் வேண்டும்," என்று அமைச்சர் கூறினார்.

மாணவர்கள் பல திறன்களை வளர்த்துகொண்டு பலவற்றைப் பற்றி அறிந்துகொள்ளும் அதே வேளையில் அவற்றில் ஒன்றில் திறமைசாலியாக இருக்க வேண் டும் என்று கேள்வி பதில் அங்கத் தில் திரு லிம் வலியுறுத்தினார்.

மேலும் இளையர்கள், தங்க ளுக்கு ஆர்வம் உள்ள வேலையைத் தேர்ந்தெடுப்பது இன்றியமையா தது என்றும் ஒரு துறையில் வெற்றி பெறுவது அதில் ஒருவர் கொண்டுள்ள நாட்டத்தைப் பொறுத்தே அமையும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தானியக்கத்துக்கு அதிக முக் கியத்துவம் கொடுக்கப்பட்டு வரு வதால் வேலை இழப்புகள் அதிக ரிக்குமா என்று மாணவர் ஒருவர் கேட்டதற்கு, "தானியக்கத்தால் உற்பத்தித் திறன் உயரும் என்ப தால் வேலைக்கு ஆபத்து வராது," என்றும் திரு லிம் கூறினார்.

செய்தி: அஷ்வினி செல்வராஜ்

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.